**FIRST INFORMATION REPORT**
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I
8073047

C

1. District மாவட்டம் : நாமக்கல் PS: காவல்நிலையம் ஊ.த.க. பிரிவு Year ஆண்டு 2019 FIR No. மு.த.அ. எண் 5/AC/2019 Date நாள் 21.05.2019

2. (i) Act சட்டம்: The P.C. Act 1988 as Sections பிரிவுகள்: 7(a)
(ii) Act சட்டம்: amended by the Prevention of Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Corruption (Amendment) Act 2018. Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை 16.05.2019 காலை சுமார் 10.24 மணிக்கு.
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை 21.05.2019 காலை சுமார் 09.25 மணிக்கு
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 21.05.2019 Time : நேரம் 15.00 மணிக்கு
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Volume-II 21.05.2019 Time : நேரம் 15.00 மணிக்கு

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / ~~வாய் மொழியாக~~ எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழக அலுவலகம், சோழசிராமணி, பரமத்தி வேலூர்-Tk, நாமக்கல்-Dt, சுமார் 40 கி.மீ மேற்கு
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் K. இராஜசேகர் (32) (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் குப்புசாமி (லேட்)
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 19.05.1987 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
(f) Occupation : தொழில் பட்டதாரி, சுயதொழில் (g) Address : முகவரி க.எண். 6/151 A இ நல்லாக் கவுண்டம்பாளையம், ஜமீன் இளம்பள்ளி கிராமம், பரமத்திவேலூர்-Tk, நாமக்கல் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
திரு. கார்த்திக், வணிக ஆய்வாளர், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழக அலுவலகம், சோழசிராமணி.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
—

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்தனுப்பப்படுகிறது:-

விவரம் தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / ~~directed~~ ........................ Rank ........................ to take up the Investigation / Refused Investigation / transferred to PS................................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / ~~பணிக்கப்படுதல்~~ ................................ பதவி ........................ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ................................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

Rupsalu 21.05.2019

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 21/5/2019
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
21-05-2019 - 18.00 மணி

Name: பெயர் M. நல்லம்மாள்...
Rank: நிலை ....................No. எண் ..........
காவல் ஆய்வாளர்,
ஊ.த.க. பிரிவு, நாமக்கல்

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p 2

E. Subbaiah HC 1101
21/05/19

நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.5/AC/2019 u/s 7(a) of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018-ன்படி பதிவு செய்யப்பட்ட முதல் தகவலறிக்கையின் வரிசை எண்.12-ன் தொடர்ச்சி...

இன்று 21.05.2019-ஆம் தேதி செவ்வாய்கிழமை பிற்பகல் 15.00 மணிக்கு காவல் ஆய்வாளராகிய நான் நிலைய அலுவலில் இருந்தபோது நாமக்கல் மாவட்டம், பரமத்திவேலூர் வட்டம், ஜமீன் இளம்பள்ளி, இ.நல்லாகவுண்டம்பாளையத்தில் வசிக்கும் குப்புசாமி(லேட்) என்பவரின் மகன் திரு.K.இராஜசேகர் என்பவர் நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் ஆஜராகி எழுத்து மூலமான புகாரினை சமர்ப்பித்தார். அந்த புகாரின் விபரம் பின்வருமாறு:-

அனுப்புநர் கு. இராஜசேகர், த/பெ.குப்புசாமி(லேட்), 6/151A இ.நல்லாக் கவுண்டம் பாளையம், ஜமீன் இளம்பள்ளி கிராமம், பரமத்திவேலூர்-Tk, நாமக்கல் மாவட்டம். பெறுநர் உயர்திரு. காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, நாமக்கல். மதிப்பிற்குரிய அம்மா/ஐயா, எனது தாயார் கு.பாவாத்தாள் (வயது-54) மேற்கண்ட முகவரியில் உள்ள எங்களது பூர்வீக நிலத்தில் சிறிய அளவில் வீடு கட்டி கடந்த மூன்று மாத காலமாக வசித்தும், விவசாய கூலி வேலை செய்தும் வருகிறார். நான் எனது மனைவி மற்றும் மகனுடன் அருகில் உள்ள கொத்தமங்கலம் கிராமத்தில் வசித்து வருகிறேன். மேற்படி எனது தாயார் வசித்து வரும் வீட்டிற்கு மின் இணைப்பு பெற வேண்டி, எங்கள் பகுதிக்கான சோழசிராமணி மின்வாரிய அலுவலகத்திற்கு 13.05.2019 அன்று சென்றேன். நேரில் சென்ற நான் காலை சுமார் 12.30 மணிக்கு பில் கவுண்டரில் அமர்ந்திருந்தவரிடம் வீட்டிற்கான புதிய மின் இணைப்பை பெறுவது எவ்வாறு? என்று கேட்டதும், அவர் கூறிய முறையைப் பின்பற்றி, அருகில் உள்ள எலக்ட்ரிக்கல் கடையில் புதிய விண்ணப்ப படிவம் பெற்று, மேலும் அதனுடன் 1) புதிய வீட்டுவரி ரசீது, 2) கிராம நிர்வாக அலுவலரிடம் பெற்ற நிலஉரிமை அத்தாட்சி ஆகியவற்றை இணைத்து, மேலும் விண்ணப்பத்தில் என் தாயாரின் கையெழுத்து பெற்று, எனக்கு விண்ணப்பத்தை நிரப்புவதில் பிழை நேருமோ என்ற ஐயத்தில் அவ்விண்ணப்ப படிவத்தை பூர்த்தி செய்யாமல் அன்று மாலை சுமார் 4.30 மணியளவில் மின்வாரிய அலுவலகத்திற்கு சென்றேன். அங்கு பில் கவுண்டரில் உள்ள உதவியாளர், அவ்விண்ணப்பத்தை அலுவலகத்தின் உள் அமர்ந்திருக்கும் கார்த்தி சாரிடம் கொடுக்க பணித்தார். விண்ணப்பத்தை பெற்றுக் கொண்ட கார்த்திக் என்பவர் 14.05.2019-ஆம்

தேதி ஆய்வு செய்ய வருவதாக கூறினார். நான் அவரிடம் எனது தாயார் தினக்கூலி வேலைக்கு செல்வதால் மாலை தான் வீடு திரும்புவார் என்றும், நானும் அருகில் உள்ள கொத்தமங்கலம் கிராமத்தில் வசிப்பதால், நீங்கள் வரும்போது எனக்கு தகவல் தெரிவியுங்கள் என்று எனது செல்போன் நெம்பர் 9655162191-ஐ சொன்னேன், அதை அவரே பேனாவினால் விண்ணப்பத்தின் கீழ் குறித்துக் கொண்டார். பின் கடந்த 15.05.2019-ஆம் தேதி மாலை சுமார் 3 மணிக்கு மேல் ஆய்வின் பொருட்டு வீட்டிற்கு வந்த அவர் எனது தாயாரிடம் மீட்டர் போர்டு மட்டும் சிறிது உயரமாக உள்ளதாகவும் அவ்விடத்தில் சிறிது மண் கொட்டி உயர்த்த வேண்டும் எனவும் கூறி சென்றுள்ளார். 16.05.2019 அன்று காலை அவர் கூறியபடியே கற்கள் மற்றும் மண் கொண்டு அவ்விடத்தை சிறிது மேடாக்கினோம். பின்னர் அன்றைய தினமே நான் காலை சுமார் 10.15 மணி அளவில் சோழசிராமணி மின்வாரிய அலுவலகத்திற்கு சென்று விசாரித்த போது கார்த்திக் வெளியில் சென்றுள்ளார் என்று அறிந்து கொண்டேன். அங்கேயே வணிக ஆய்வாளர் கார்த்திக் அவரின் செல்போன் எண் 9965454849 பெற்று காலை சுமார் 10.24 மணிக்கு அவருக்கு கால் செய்து பேசி மீட்டர் போர்டு பகுதியில் மண் கொட்டிவிட்டதாக சொன்னேன். அதற்கு அவர் என்னிடம் பணம் ரூ.2,500/- கொடுக்க வேண்டும் என்றும், தற்போது லீவில் உள்ளதால் திங்கள்கிழமை வந்து சந்திக்குமாறும் கூறினார். நேற்று திங்கட்கிழமை எனக்கு நேரமில்லாததால் இன்று 21.05.2019-ஆம் தேதி செவ்வாய்க்கிழமை காலை சுமார் 9.25 மணிக்கு நான் சோழசிராமணி மின்வாரிய அலுவலகம் சென்று அங்கிருந்த வணிக ஆய்வாளர் கார்த்திக் அவர்களை சந்தித்து அவர் சொன்னபடி மீட்டர் பாக்ஸ் வைக்கும் இடத்தில் தரையில் மண்கொட்டி மேடாக்கிய விசயத்தை சொல்லி எனது அம்மா பெயரிலான வீட்டிற்கு வழங்க வேண்டிய மின் இணைப்பு குறித்து கேட்டபோது அதற்கு அவர் நேற்றும் உங்க வீட்டை போய் பார்த்து விட்டுத்தான் வந்தேன், பணம் கொண்டு வந்தீர்களா என்று கேட்டார், நான் எவ்வளவு என்று கேட்டேன், அதற்கு அவர் எனக்கு தனியாக ரூ.2,300/- கொடுத்திடுங்க, நான் சர்வீஸ் கொடுக்க ஏற்பாடு செய்கிறேன் என்று சொன்னார். நான் எனது அம்மா கூலி வேலைதான் செய்கிறார் என்று சொன்னேன். அதற்கு அவர் எல்லோரிடமும் வாங்குவதைவிட உங்களிடம் குறைவாகத்தான் கேட்டுள்ளேன் என்று சொன்னார். சோழசிராமணி மின்வாரிய வணிக ஆய்வாளர் திரு.கார்த்திக் கேட்ட பணம் ரூ.2,300/-ஐ லஞ்சமாக கொடுக்க எனக்கு விருப்பமில்லை. எனவே திரு.கார்த்திக், சோழசிராமணி மின்வாரிய வணிக ஆய்வாளர் கேட்ட பணம் ரூ.2,300/-த்துடன் நாளை அவரை

சந்திக்க உள்ளேன். அவர் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு தங்கள் பணிவுள்ள (Sd/-K.Rajasekar) (கு. இராஜசேகர்) இடம்: கொத்தமங்கலம் நாள்: 21.05.2019.

மேற்கண்ட புகார் மனுவை பெற்று, படித்துப்பார்த்து, புகாரில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகளின் அடிப்படையில் கைது செய்யப்படக்கூடிய குற்றம் ஏதேனும் செய்யப்பட்டுள்ளதா என்றும், எதிரிக்கும், புகார்தாரருக்கும் தனிப்பட்ட முறையில் முன்விரோதம் உள்ளதா என்பது குறித்தும் இரகசிய விசாரணை மேற்கொள்ளப்பட்டதில் எதிரி மீது குற்ற வழக்கு பதிவு செய்ய போதுமான முகாந்திரம் இருப்பதும், புகார்தாரருக்கும், எதிரிக்கும் முன்விரோதம் ஏதுமில்லை என்றும், புகார்தாரருடைய புகார் நம்பகத்தன்மை கொண்டது என்பதும் தெரிய வந்ததால், சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரகத்தில் வாய்மொழியான ஒப்புதல் பெற்று இன்று 21.05.2019-ஆம் தேதி மாலை 16.30 மணிக்கு நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்.05/AC/2019, u/s 7(a) of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018-ன்படி மேற்படி எதிரி மீது குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது.

பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார்தாரரின் புகார் மனு ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி மற்றும் தலைமைக் குற்றவியல் நீதித்துறை நடுவர், நாமக்கல் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்து, வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன்.

(M. நல்லம்மாள்) 21/5/2019
காவல் ஆய்வாளர்,
ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
நாமக்கல்.